**பேலியகொட நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 04 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து பேலியாகொட நகர சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

**(அ)** பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையினால் சொத்து ஒன்றுக்காக 2015 டிசெம்பர் 31 இல் ரூபா 625,000 வழங்கப்பட்டுள்ள போதிலும் 2016 ஆம் ஆண்டில் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஆனாலும் மீளாய்வாண்டுக் கணக்கில் வருமதியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** பேலியகொட மீன் சந்தையில் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 154,000 சிட்டையிடப்படாமையினால் வருமானம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

**(இ)** 2015 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட 16 வேலைகளிற்காக ரூபா 5,410,622 ஆன தொகை செலவுக் கடனிற்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்கான செலவுக்கடன் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** மீளாய்வாண்டில் 02 திட்டங்களிற்காக மாகாண சபையிடம் இருந்து கிடைக்க வேண்டிய மூலதன மானியம் ரூபா 1,163,477 ஆன தொகை கிடைக்க வேண்டிய மூலதன மானியக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஊ)** கிடைக்க வேண்டிய வருமானமாக காட்டப்பட்டுள்ள வருமதியாளர்களிடமிருந்து ரூபா 3,966,656 ஆன மூலதன மானியம் கிடைக்காமல் சொத்தாகக் கணக்குகளில் இனங்காணப்பட்டமையினால் இது தவறான சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

**(எ)** மீளாய்வாண்டில் கடன் அடிப்படையில் எடுத்த பெக்கோ லோடரிற்காக கடன் மீதி ரூபா 7,704,962 உம் மேற்படி இயந்திரத்திற்காக சபையினால் செலவு செய்யப்பட்ட ரூபா 2,270,000 உம் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்த பிக்கப் வாகனத்திற்காக கொடுக்க வேண்டிய

கடன் மீதி ரூபா 353,136 உம் மொத்தக் கடன் மீதி ரூபா 10,328,098 ஆன தொகை மோட்டார் வாகனக் கணக்கிலும் மொத்த ஆக்கப் பொருட் செலவுக் கணக்கிலும் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

**(ஏ)** நன்கொடையாகக் கிடைத்த மோட்டார் வாகனங்களும் வண்டியும் ரூபா 26,891,063 ஆன தொகை நாட்குறிப்பு இலக்கம் 31 இன் படி மூலதன நன்கொடைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு மூலதன செலவீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும் ஆனாலும் திரண்ட நிதிக்கணக்கில் வரவு வைக்காமையினால் திரண்டநிதி கணக்கு முழுமையாக மூடப்பட்டுள்ளது. இதனால் ஐந்தொகையில் திரண்ட நிதிக் கணக்கு காட்டப்பட்டிருக்கவில்லை மற்றும் வருமானக் கூற்றில் மூலதனக் கணக்கு குறைவாக காட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 சமப்படுத்தப்படாத கணக்குகள்

கணக்குகளின் எண்ணிக்கை 6 இல் உள்ள 2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா. 73,130,434 உள்ள போதிலும் அவற்றிற்கான உபபேரேடுகளின் படி மீதிகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா. 46,354,622 ஆகக் காட்டப்பட்டதனால் ரூபா. 26,775,812 வித்தியாசமாக உள்ளது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 டிசெம்பர் 31 இற்கு அறவிடவேண்டிய ஊழியர் முற்பணக் கணக்குகளின் கூட்டுமொத்தத் தொகையாக ரூபா. 14,027,671 உள்ள போதிலும் அந்த மீதியில் 45 அலுவலர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா. 777,870 முற்பணக் கடன் நீண்டகாலமாக அறவிடப்படாமல் உள்ளது.

(ஆ) 2015 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகையில் காட்டிய கிடைக்கவேண்டிய ஆதனவரிக் கணக்கில் சில காலமாக ரூபா. 5,400 காணப்பட்ட போதிலும் அதனைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள ரூபா 5,000 ஆனது சம்பள முற்பணக் கொடுப்பனவுக் கணக்கில் சில காலமாகக் காணப்பட்டபோதிலும் அதனைத் தீர்ப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்வுச் சான்றின்மை

(அ) கூட்டுமொத்தத் தொகையான ரூபா. 62,965,648 ஆன 8 கணக்கு விடயங்களின் எழுத்தாவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வில் சான்றுபடுத்த முடியாதுள்ளது.

(ஆ) 2015 டிசெம்பர் 31 ஆம் திகதிய களஞ்சியக் கணக்கின் பிரகாரம் ரூபா. 5,474,575 ஆன தொகை காணப்பட்டபோதிலும் அத்திகதியில் களஞ்சியப் பேரேட்டில் உள்ள அத்தொகைக்கான பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடனும் முகாமைத் தீர்மானங்களுடனும் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) நகரசபைச் சட்டத்தின் பிரகாரம் (255 ஆம் அதிகாரம்) 170 (1) மற்றும் 170 (2) பிரிவின் பிரகாரம் கிடைக்கவேண்டிய வரிகள் மற்றும் தண்டப் பணங்களிற்கான பணம் பெற்றுக்கொண்டு நகரசபை அரசிறைக் கணக்குகளில் வரவு வைக்க ஏற்பாடு செய்வது நகரசபை செயலாளரின் கடமையாக

இருந்தபோதிலும் ரூபா. 31,613,338 ஆன கிடைக்கவேண்டிய ஆதனவரி எடுப்பதற்கும் சொத்துக்களைச் சட்டப்படி மூடுவதற்கும் ஏற்பாடு செய்யவில்லை மற்றும் ரூபா. 1,084,955 கிடைக்க வேண்டிய வருமானத்தைச் சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 இன் படி ரூபா 192,716 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலையை மீள அறவீடு செய்வதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(இ) பொது நிர்வாகச் செயலாளரின் 2007 மே 19 ஆந் திகதிய 9/2007(v) ஆம் இலக்க சுற்று நிருபத்தின் படி பொது சுகாதார பரிசோதகருக்கு 1/20 கொடுப்பனவு கணிக்கும் போது எல்லாக் கொடுப்பனவுகளும் அடங்கலாக அவருடைய ஓய்வூதியத் திகதிக்கு கணித்த சம்பளம் ரூபா 21,180 ஐ அடிப்படையாக வைத்து வழங்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக விடுமுறை நாட் கொடுப்பனவு ரூபா 16,066 ஆன தொகை அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 9,946,112 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 10,732,401 ஆக விளைந்திருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய என்பவற்றின் விபரம் பின்வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000' | உண்மை (ரூபா) '000' | டிசெம்பர் 31 இல் நிலுவை (ரூபா) '000' |
|---|---|---|---|
| வீதவரிகள் | 44,550 | 39,838 | 31,613 |
| வாடகைகள் | 2,267 | 2,581 | 658 |
| உரிமங்கள் | 879 | 1,294 | 427 |
| ஏனைய வருமானங்கள் | 17,655 | 11,577 | 16,640 |
| | **65,351** | **55,290** | **49,338** |

மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 55,290,000 ஆக உள்ள போதிலும் வருட முடிவில் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 49,338,000 ஆக காணப்பட்டமையினால் அது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 89 வீதமாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபையால் வழங்கப்பட்ட செயற்பாட்டு திட்டத்தில் 07 நடவடிக்கைகள் செய்யப்படவில்லை. 04 நடவடிக்கைகள் அரைவாசியும் 01 நடவடிக்கை 25 வீதம் மட்டும் செய்யப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

2013 ஜனவரி 31 இல் ஆதனவரிக்காக ரூபா 149,210 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்ட போதிலும் அந்தக் காசோலைக்காக வழங்கப்பட்ட கழிவு ரூபா 16,579 மீளாய்வாண்டு வரைக்கும் அறவீடு செய்ய சபையினால் எவ்விதமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு தரமுயர்த்தல் திட்டம் கடன் ரூபா 9,080,000 ஐயும் மீதி சபை நிதியிலிருந்து செலவு செய்து ரூபா 11,350,000 பெறுமதியில் உள்ள பெக்கோ லோடர் ஒன்று நகர சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பொது நிர்வாக உள்ளூராட்சி மற்றும் குடியமைப்பு கட்டுப்பாட்டு அமைச்சரினால் உள்ளூராட்சி சபையில் வேலைத்தளத்திற்கு அடிப்படை திட்டங்களிற்கான இயந்திர உபகரணமாக 2015 யூலை 02 இல் மேலதீகமாக ஒரு பெக்கோ லோடர் வழங்கப்பட்ட போதிலும் சபையினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,048,080 கொடுத்து பரவுவதற்காக தனியாரிடம் வழங்கி சேவை பெறப்பட்டிருந்தது.

(ஆ) சபை ஊழியருக்கும் மற்றும் நகரசபை உறுப்பினர்களுக்கும் கலி பௌசர் 18 தடவைகள் இலவசமாக வழங்கப்பட்ட போதிலும் அதை ஆராய்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை.

(இ) 02 எண்ணிக்கையான விபத்துக்களிற்காக ரூபா 562,830 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104(1) படி புலனாய்வு செய்யப்படவில்லை.

**3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

**மாகாண சபை சட்டங்களிற்கு எதிராக செயற்படுதல்**

மேல் மாகாண பிரதம அமைச்சின் 2008 யூலை 30 ஆம் திகதிய 1560/6 இலக்க சுற்று நிருபத்தில் பிரசுரிக்கப்பட்ட 2008 இலக்கம் 1 ''திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான சட்டங்கள்'' எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் தொடங்க வேண்டும் என்றும் 2010 டிசெம்பர் 21 இல் உள்ளூராட்சி ஆணையாளர் (மேல் மாகாணம்) இலக்கம் எல்பிடி/05/08/பொது/தொகுதி கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதிலும் நகரசபை தொடங்கும் போது 9,18(1),20,22,54 மற்றும் 59 இல் உள்ள சட்டங்களின் நிதியை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) வருமானக் கட்டுப்பாடு
(உ) சொத்து முகாமைத்துவம்